வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 4615/ஆ5/2024, நாள்.17/12/2024

.....

பொருள் பள்ளிக் கல்வி – அய்யன் திருவள்ளுவரின் 133 அடி உயர திருவுருவச்சிலை – முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கன்னியாகுமரியில் நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு – வெள்ளிவிழா கொண்டாடுதல் – தொடர்பாக

பார்வை
1. சென்னை – 6, அரசுச் செயலாரின் நேர்முக கடித எண். 11544/பொது.நூ1/2024–1, நாள். 02.12.2024
2. வேலூர் மாவட்ட நூலக அலுவலரின் (பொ) கடித ந.க.எண்.4239/இ/2024, நாள். 10.12.2024

.....

பார்வை 2–ல் காணும் கடிதத்தில், அய்யன் திருவள்ளுவரின் 133 அடி உயர திருவுருவச்சிலை 01.01.2000 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கன்னியாகுமரியில் நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெறவுள்ள நிலையில், அதற்கான வெள்ளி விழாவினை கொண்டாடும் பொருட்டு மாவட்ட மைய நூலகங்களில் டிசம்பர் 23 முதல் டிசம்பர் 31 வரை திருவள்ளுவர் புகைப்படம் காட்சிப்படுத்தி திருக்குறளின் பெருமையை உயர்த்தும் வகையில் நிகழ்ச்சிகள் நடத்துதல், திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்தல், திருக்குறள் விளக்க உரைகளையும் திருக்குறள் தொடர்பான புகைப்படங்களையும் பொதுமக்கள் பார்வைக்கு வைத்து புகைப்பட கண்காட்சியினை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் தொடங்கி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், இப்பொருள் சார்பாக டிசம்பர் 23 முதல் டிசம்பர் 31 வரை வாசகர் வட்டம் மூலம் மாணவர்கள் மற்றும் நூலக வாசகர்களைக் கொண்டு திருக்குறள் தொடர்பான பேச்சுப்போட்டி, வினாடிவினா, திருக்குறள் ஒப்புவித்தல் போன்ற போட்டிகள் வேலூர் மாவட்ட மைய நூலகத்தில் நடத்தப்பட்டு, ஒவ்வொரு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் முதல் பரிசு ரூ. 5000,/– இரண்டாம் பரிசு ரூ. 3000/– மற்றும் மூன்றாம் பரிசு ரூ. 2000/– என பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கீழ்காணும் அட்டவணையின்படி நடைபெறும் போட்டிகளில் அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பொறுப்பாசிரியருடன் கலந்துக்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண். | போட்டி விவரம் | போட்டிகளின் தலைப்பு | போட்டி நடைபெறும் நாள் | போட்டி நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | பேச்சு போட்டி<br><br>(6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை) | 1. குழல் இனிது யாழ் இனிது<br><br>2. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்<br><br>3. குமரியில் அய்யன் வள்ளுவர் சிலையும் குறளில் அதிகார வைப்பு முறையும் | 24.12.2024 (செவ்வாய் கிழமை)<br><br>பிற்பகல் 2.00 மணி | மாவட்ட நூலக அலுவலகம்,<br><br>வேலூர் மாவட்டம்,<br><br>(ஸ்ரீ வெங்கடேஸ்வரா நிதியுதவி மேல்நிலைப் பள்ளி எதிரில்) |
| 2 | திருக்குறள் ஒப்புவித்தல்<br><br>(6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை) | ஏதேனும் 5 அதிகாரம் | 26.12.2024<br><br>(வியாழன்)<br><br>பிற்பகல் 2.00 மணி | |
| 3 | வினாடி – வினா<br><br>(6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை) | திருக்குறள்<br><br>தொடர்பானது | 27.12.2024 (வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணி | |

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

17.12.24

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகள், .
வேலூர் மாவட்டம்.

நகல் –

1. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலை)
   வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. மாவட்ட நூலக அலுவலர் (பொ)
   மாவட்ட நூலக அலுவலகம்,
   வேலூர் மாவட்டம்.